# திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு

*திருவழிப்பாட்டு ஆண்டு* C (06-12-2015)

## இன்றைய நற்செய்தி வாசகங்கள்

**பாரூக்கு 5: 1-9**

**பிலிப்பியர் 1: 4-6, 8-11**

**லூக்கா 3:1-6**

## திருப்பலி முன்னுரை- 1

இயேசு பாலகனின் பிறப்பைக் தூய்மையான உள்ளத்தோடு கொண்டாட, அவரை இதயத்தில் வரவேற்க இவ்வாலயம் வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்தி வரவேற்கின்றோம். இன்று திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்.

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே இன்றைய நற்செய்தியின் வழியாகவும்,திருமுழுக்கு யோவான் வழியாகவும் இறைவன் நமக்கு விடுக்கின்ற அழைப்பு என்னவென்றால் “மனமாற்றம்”. நாம் அனைவரும் நம்முடைய பழைய பாவ இயல்பை விட்டுவிட்டு இயேசு பாலகனை நமது இதயத்தில் தாங்க வேண்டும். அதற்கான வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## திருப்பலி முன்னுரை - 2

இயேசு பாலகனின் பிறப்பைக் தூய்மையான உள்ளத்தோடு கொண்டாட, அவரை இதயத்தில் வரவேற்க இவ்வாலயம் வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இன்று திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம். நம் ஆண்டவரும், மீட்பருமான இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தத்தோடு கொண்டாட நம்மை உரிய முறையில் ஆயத்தம் செய்ய, அழைக்கும் காலமாக இக்காலம் அமைகின்றது. கடவுள் வானத்தின்கீழ் உள்ள எல்லா நாடுகளுக்கும் உன் பேரொளியைக் காட்டுவார். நீதியில் ஊன்றிய அமைதி, இறைப்பற்றில் ஒளிரும் மாட்சி என்னும் பெயர்களால் கடவுள் உன்னை என்றென்றும் அழைப்பார், என்னும் இறைவாக்குகள், நம்பிக்கையற்ற நிலையில் இருக்கும் நமக்கு புதிய சக்தியையும் நம்பிக்கையையும் தருவதாக உள்ளது. கடவுள் நம்சார்பாகச் செயலாற்றுவார், நம்மை விடுவிப்பார், நம் துன்பங்களையெல்லாம் அழித்துப் போடுவார் என்பதை இன்றைய இறைவார்த்தைகள் வழியாக நாம் காணக்குகூடியதாக உள்ளது. இறைவனின் இந்த அருட்பெருக்கு ஆசீர்வாதமாகவும், வாக்குறுதியாகவும் நம்மை வந்தடைகின்ற போது, நாமும் பெறுப்புடன் செயலாற்ற வேண்டும் என்னும் உண்மையும் உணர்த்தப்படுகின்றது. அதாவது பாவ மன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என்பதே அவ் அழைப்பாகும். ஆகவே மனம்மாறி உறவுகளைப் புதுப்பித்து புதுவாழ்வு வாழ அருள் கேட்டுச் செபிப்போம்.

## முதல் வாசகம்

கடவுள் உன் பேரொளியைக் காட்டுவார்.

**இறைவாக்கினர் பாருக்கு நூலிலிருந்து வாசகம் 5: 1-9**

எருசலேமே, உன் துன்ப துயரத்தின் ஆடைகளைக் களைந்துவிடு கடவுள் உனக்கு அருளும் மாட்சியின் பேரழகை என்றென்றும் ஆடையாக அணிந்துகொள். கடவுளிடமிருந்து வரும் நீதியை ஆடையாய்ப் புனைந்துகொள் என்றும் உள்ளவரின் மாட்சியை மணிமுடியாக உன் தலைமீது சூடிக்கொள். கடவுள் வானத்தின் கீழ் உள்ள எல்லா நாடுகளுக்கும் உன் பேரொளியைக் காட்டுவார். ஹநீதியில் ஊன்றிய அமைதி“, ஹஇறைப்பற்றில் ஒளிரும் மாட்சி“ என்னும் பெயர்களால் கடவுள் உன்னை என்றென்றும் அழைப்பார். எருசலேமே, எழுந்திரு உயர்ந்த இடத்தில் எழுந்து நில். கீழ்த்திசையை நோக்கு் கீழ்த்திசை முதல் மேற்றிசை வரை உள்ள எல்லா நாடுகளிலிருந்தும் உன் மக்கள் தூயவரின் சொல்லால் ஒன்று சேர்க்கப்பட்டு, கடவுள் தங்களை நினைவுகூர்ந்ததற்காக மகிழ்வதைப் பார். பகைவர்கள் கடத்திச் சென்ற உன் மக்கள் உன்னை விட்டுப் பிரிந்து சென்ற பொழுது நடந்து சென்றார்கள் ஆனால் கடவுள் அவர்களை உன்னிடம் திரும்ப அழைத்துவரும் பொழுது அரியணையில் வீற்றிருக்கும் மன்னர்போல் உயர்மிகு மாட்சியுடன் அழைத்துவரப்படுவார்கள். கடவுளின் மாட்சியில் இஸ்ரயேல் பாதுகாப்புடன் நடந்து வரும்பொருட்டு, உயர்மலைகள் என்றென்றும் உள்ள குன்றுகள் எல்லாம் தாழவும் பள்ளத்தாக்குகள் நிரம்பவும் இவ்வாறு நிலம் முழுதும் சமமாகவும் கடவுள் கட்டளையிட்டுள்ளார். மேலும், காடுகளும் நறுமணம் வீசும் மரங்கள் அனைத்தும் கடவுளின் கட்டளையால் இஸ்ரயேலுக்கு நிழல் கொடுத்தன. கடவுள் தம் மாட்சியின் ஒளியில் மகிழ்ச்சியோடும், தம்மிடமிருந்து வெளிப்படும் இரக்கத்தோடும் நீதியோடும் இஸ்ரயேலை அழைத்து வருவார்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

- இறைவா உமக்கு நன்றி

**பதிலுரைப் பாடல்**

ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல்கள் புரிந்துள்ளார்.

**திருப்பாடல் 126: 1-2 4-5. 6**

சீயோனின் அடிமை நிலையை ஆண்டவர் மாற்றினபோது, நாம் ஏதோ கனவு கண்டவர்போல இருந்தோம். 2யடி அப்பொழுது, நமது முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது. நாவில் களிப்பாரவாரம் எழுந்தது. **பல்லவி**

ஆண்டவர் அவர்களுக்கு மாபெரும் செயல் புரிந்தார்“ என்று பிற இனத்தார் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார் அதனால் நாம் பெருமகிழ்ச்சியுறுகின்றோம். **பல்லவி**

ஆண்டவரே, தென்னாட்டின் வறண்ட ஓடையை நீரோடையாக வான்மழை மாற்றுவதுபோல, எங்கள் அடிமை நிலையை மாற்றியருளும். கண்ணீரோடு விதைப்பவர்கள், அக்களிப்போடு அறுவடை செய்வார்கள். **பல்லவி**

விதை எடுத்துச் செல்லும்போது - செல்லும்போது - அழுகையோடு செல்கின்றார்கள் அரிகளைச் சுமந்து வரும்போது - வரும்போது - அக்களிப்போடு வருவார்கள். **பல்லவி**

## இரண்டாம் வாசகம்

கிறிஸ்துவின் நாளுக்கென்று குற்றமற்றவர்களாக நேர்மையோடு வாழ்ந்து வாருங்கள்.

**திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1: 4-6, 8-11**

சகோதரர் சகோதரிகளே, உங்கள் அனைவருக்காகவும் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு மன்றாடி வருகிறேன். ஏனெனில் தொடக்கமுதல் இன்றுவரை நீங்கள் நற்செய்திப் பணியில் என்னோடு பங்கேற்று வருகிறீர்கள். உங்களுள் இத்தகைய நற்செயலைத் தொடங்கியவர், கிறிஸ்து இயேசுவின் நாள் வரை அதை நிறைவுறச் செய்வார் என உறுதியாய் நம்புகிறேன். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த அதே பரிவுள்ளத்தோடு உங்கள்மீது எத்துணை ஏக்கமாயிருக்கிறேன் என்பதற்குக் கடவுளே சாட்சி. மேலும், நீங்கள் அறிவிலும் அனைத்தையும் உய்த்துணரும் பண்பிலும் மேன்மேலும் வளர்ந்து, அன்பால் நிறைந்து, சிறந்தவற்றையே ஏற்றுச் செயல்படுமாறு இறைவனை வேண்டுகிறேன். கடவுளின் மாட்சிக்காகவும் புகழ்ச்சிக்காகவும் இயேசு கிறிஸ்துவின் வழி-யாய் நீதியின் செயல்களால் நிரப்பப்பெற்று கிறிஸ்துவின் நாளுக்கென்று குற்றமற்றவர்களாக நேர்மையோடு வாழ்ந்துவர வேண்டுமென்றே இவ்வாறு செய்கிறேன்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு

- இறைவா உமக்கு நன்றி

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவருக்காக வழியை ஆயத்த மாக்குங்கள் அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள் மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர். அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 3: 1-6

திபேரியு சீசர் ஆட்சி செய்துவந்த பதினைந்தாம் ஆண்டில், பொந்தியு பிலாத்து யூதேயாவின் ஆளுநராக இருந்தார். ஏரோது கலிலேயப் பகுதிக்கும் அவன் சகோதரராகிய பிலிப்பு, இத்துரேயா, திரக்கோனித்துப் பகுதிகளுக்கும் லிசானியா அபிலேன் பகுதிக்கும் குறுநில மன்னர்களாக இருந்தனர். அன்னாவும் கயபாவும் தலைமைக் குருக்களாய் இருந்தனர். அக்காலத்தில் செக்கரியாவின் மகன் யோவான் பாலைநிலத்தில் வாழ்ந்து வந்தார். அவர் கடவுளின் வாக்கைப் பெற்றார். "பாவமன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்" என்று யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகள் அனைத்துக்கும் சென்று அவர் பறைசாற்றிவந்தார். இதைப்பற்றி இறைவாக்கினர் எசாயாவின் உரைகள் அடங்கிய நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: "பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது: ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள் பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும் மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும் கோணலானவை நேராக்கப்படும் கரடுமுரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்."

- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.

- கிறிஸ்துவே உமக்கு புகழ்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**படைப்பின் முதல்வனே இறைவா!**

இந்த உலகில் பயனம் செய்யும் திருச்சபை,அதன் தலைவர்களும் மக்களின் நலனில் அக்கரைக் கொண்டு, வாழ்விழந்த மக்களுக்கு அன்பின், இரக்கத்தின், மன்னிப்பின், மற்றும் அமைதியின் கருவிகளாகச் செயல்பட, கிறிஸ்துவின் மீட்பைத் தங்கள் நல்ல செயல்கள் மூலம் பிறருக்கு அறிவிக்கும் வரம் தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஆதரித்துக் காக்கும் இறைவா!**

ஆயனில்லா ஆடுகள்போல இன்று தவித்து நிற்கும் மக்களை கருணையுடன் கண்ணோக்கிப் பாரும். அவர்களின் துன்ப துயரங்களைப் போக்கி, அவர்கள் சரியான திசையை நோக்கிப் பயணிக்கவும், என்றும் அமைதியையும், உடல், நலத்தையும், பாதுகாப்பையும் பெற்று வாழவும், உமது அன்பின் சிறகுகளுக்குள் அவர்களை வைத்துக் காத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உறவின் ஊற்றே இறைவா!**

இன்றைய நாட்களிலே குடும்பத்தின் புனிதத் தன்மைக்கும், உறவுக்கும், ஒற்றுமைக்கும் எதிராக இருக்கும் எல்லாச் சக்திகளையும் முறியடித்து: குடும்பங்களிலே அன்பும், ஒற்றுமையும், தோழமையும், புரிந்துணர்வும் நிலைபெற்று: குடும்பங்கள் திருக்குடும்பத்தின் தன்மைகளைக் கொண்டு வாழ அருளாசீர் அளித்திடவேண்டுமென்றும்: பிரிந்திருக்கும் குடும்பங்களை ஒன்று சேர்த்திடவேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மாபெரும் விடுதலைச் சக்தியாகிய தந்தையே!**

இன்று நாங்கள் ஊனியல்பின் நாட்டங்களுக்குள் அகப்பட்டும், அரசியல் அடித்தனத்திற்குள் அகப்பட்டும் விடுதலை பெற தவித்துக்கொண்டிருக்கின்றோம். எனவே ஆண்டவரே! தென்னாட்டின் வறண்ட ஓடையை நீரோடையாக வான்மழை மாற்றுவதுபோல, எங்கள் அடிமை நிலையை மாற்றியருள வேண்டுமென்றும், நாங்கள் ஒவ்வொருவரும் வாழ்வுதரும் உமது வார்த்தையின் ஒளியிலே எமது தீய வாழ்க்கைப் போக்குகளிலிருந்து திரும்பி, மனம்மாறி உறவுகளைப் புதுப்பித்து புதுவாழ்வு வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்பின் இறைவா,**

இறந்து போன அனைத்து ஆன்மாக்களுக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்திட வேண்டுமென்றும், எமது நாட்டில் ஏற்பட்ட போரில் இறந்து போன அனைவருக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்திட வேண்டுமென்றும், யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களை ஆசிர்வதித்து உம்மிடம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

எமது இளம் தலைமுறையினர் நிதானத்தோடும், முழு ஞானத்தோடும் உமது வழிகளைக் கண்டடைந்து, உமக்குரியவர்களாக வாழ அவர்களை நிறை உண்மையை நோக்கி வழி நடாத்தியருள வேண்டுமென்றும், நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நோயாளரின் ஆரோக்கியமே இறைவா!**

உடல், உள நோயினால் வேதனையுறும் அனைவரையும் நீர் இரக்கத்துடன் கண்நோக்கி: அவர்களின் வேதனையைத் தணித்து, நிறைவான உடல், உள நலத்தை அளித்துக் காத்திட வேண்டுமென்றும், இன்று எமது சமூகத்திலே வீணான விவாதங்களாலும், குழப்பங்களாலும், தவறான போதனைகளாலும், பிடிவாதத்தாலும், உறவை முறித்து, விசுவாசத்தை மறந்து பாதை மாறிச் செல்லும் அனைவர்மீதும் மனமிரங்கி உமது வழியில் செல்ல அவர்களை வழிப்படுத்தியருள வேண்டுமென்றும், எமது இளைஞர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களது இளமைப் பருவத்தின் பாவங்களையும், குற்றங்களையும் நினையாது உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் அவர்கள் மேல் பொழிந்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இன்றைய சிந்தனை

“திருமுழுக்கு யோவான், “பாவமன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்“ என்று யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகள் அனைத்துக்கும் சென்று பறைசாற்றிவந்தார்“ (லூக்கா 3:3)

நற்செய்தி நூல்களில் திருமுழுக்கு யோவானுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. அவர் இயேசுவின் வருகையை முன்னறிவித்தவர். பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் பாலம் போல அமைந்தவர். யோவானின் வாழ்க்கைப் பாணியே தனி. அவர் குருக்கள் குலத்தைச் சார்ந்தவர். அவருடைய தந்தை செக்கரியா எருசலேம் கோவிலில் திருப்பணி ஆற்றிவந்தார் (லூக் 1:8). ஆனால் யோவான் குருப்பணி ஆற்றவில்லை. மாறாக, அவரை நாம் பாலைநிலத்தில் காண்கின்றோம். பாலைநிலம் என்பது இஸ்ரயேலரின் வாழ்விலும் வரலாற்றிலும் தனிப்பொருள் கொண்ட ஓர் உருவகம். அதாவது, எகிப்து நாட்டில் அடிமைகளாக வேலைசெய்து துன்புற்ற இஸ்ரயேலர் கடவுளின் வல்லமையாலும் மோசேயின் வழிநடத்தலாலும் விடுதலை பெற்று வந்தபோது பாலைநிலத்தில் நாற்பது ஆண்டுகள் வழிநடந்தனர். அதன் பிறகு வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையும்போது அவர்கள் யோர்தான் நதியைத் தாண்டினார்கள். யோவானும் அதே யோர்தான் நதியில் மக்கள் இறங்கி முழுக்குப் பெற வேண்டும் எனக் கேட்டார். அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்றால் திருமுழுக்குப் பெற வேண்டும் என அவர் கோரினார்.

யோவான் அறிவித்த செய்தியில் ““மன மாற்றம்““ முக்கியமானது. இங்கே மனம் எனக் குறிக்கப்படுவது மனிதரின் முழுமையையும் குறிக்கும். நம் உள்ளத்தில் உண்மையான மாற்றம் ஏற்படும்போது அந்த மாற்றம் நம் சொல்லிலும் செயலிலும் உறவிலும் நடத்தையிலும் வெளிப்படும் என்பது தெளிவு. எனவேதான் மக்கள் மனம் மாற வேண்டும் என்று கேட்ட யோவான் மக்கள் தங்கள் வாழ்க்கைப் பாணியை வேரோட்டமாக மாற்றி அமைத்திட வேண்டும் என அறிவித்தார். இயேசுவும் இந்தச் செய்தியை அறிவிப்பார். ஆக, கடவுளுக்கு நாம் நமது உள்ளத்தைத் திறந்து கொடுக்க வேண்டும் என்றால் அந்த உள்ளத்தில் முதலில் ஒரு மாற்றம் நிகழ வேண்டும். நாம் நமது என்னும் போக்கு இருக்கும் வரை அங்கே கடவுளுக்கு இடம் இராது. ஆனால் பிறரை நாம் அன்புசெய்து, அவர்களையும் நம்மையும் மன்னித்து ஏற்கின்ற கடவுளையும் அன்புசெய்து வாழக் கற்றுக்கொண்டால் நம்மில் ஏற்படுகின்ற மாற்றம் உண்மையிலேயே கடவுளுக்கு உகந்த மாற்றமாக இருக்கும். அப்போது நம் வாழ்வில் விடுதலையும் மீட்பும் எதார்த்தம் ஆகும்.

### மன்றாட்டு:

இறைவா, எங்கள் வாழ்க்கை முறையை உமக்கு உகந்ததாக மாற்றிட அருள்தாரும்.